REGD. No. M. 6311

PHONE No.: 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 310

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ 7—8—0

சென்னை : வைகாசி 29உ வெள்ளி (11—6—54) ★ ★ ★ வெளியூர் : வைகாசி 30உ சனி (12—6—54)

திண்டிவனத்தில் திருக்குறளார் ★

பரணி பாட! பாசறை அமைக்க!!

வன்னியர் வாழ்வு வளம் பெற வழி என்ன?

மந்திரி வேலைக்கு மனுப் போடுவதா?

உழைப்பாளர் கட்சி உருப்படாவிட்டால் 'உழவர் கட்சி' துவக்க யோசனை

★

(நமது அரசியல் நிருபர்)

திண்டிவனத்திற்கு திருக்குறளார் வருகிறார்—பரணி பாட, பாசறை அமைக்க—என்ற செய்தி தென் ஆற்காடு மாவட்ட வன்னிய மக்களிடையே புதியதோர் எழுச்சியைத் தந்திருக்கிறது.

உழைப்பாளர் கட்சித் தலைவர் காங்கிரஸ் மந்திரி சபையில் இடம் பிடித்துக்கொண்டது 'மாபெரும் துரோகம்' என்று கருதுகிற வன்னியர்கள், எல்லாப் பகுதிகளிலும் ஏராளமாக இருக்கிறார்கள். சமூகத்தின் அரசியல் வாழ்வு, ராமசாமி 'கனம்' ஆனதால் ஆபத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது என்று உணர்ந்த வன்னியப் பெருங்குடி மக்கள், ஒன்றுகூடித் தமது கண்டனத்தைக் காட்டுவதற்கு உறுதி கொண்டுள்ளனர்.

இதை மறைப்பதற்காக, 'கனம்' ராமசாமியை, வன்னியரல்லாதவர் கண்டிப்பதுபோல ஒரு நாடகம் கட்டிவிடப்பட்டிருக்கிறது.

இதை உணர்ந்து, திராவிட முன்னேற்றக் கழகம், "இந்தப் பிரச்னை, வன்னியருக்கும் அல்லாதாருக்கும் இடையே ஏற்பட்டதல்ல; மக்களுக்கும், வாக்குத் தவறும் 'கனத்'துக்கும் இடையே ஏற்பட்டதாகும்," என்பதை விளக்கி இருக்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூர், சிதம்பரம், கள்ளக்குறிச்சி, வளவனூர், திட்டக்குடி ஆகிய பல இடங்களில், தி. மு. கழகம் பொதுக்கூட்டங்கள் நடத்தி, உழைப்பாளர் கட்சியை 'கனம்' ராமசாமி உதைக்குழியச் செய்துவிட்ட சதியை அம்பலமாக்கி இருக்கிறது. வன்னிய மக்களுக்கு, ராமசாமி 'கனம்' ஆகிவிட்டதால் இம்மி அளவு பலனும் கிடைக்காது என்பதை விளக்கி இருக்கிறது.

கிராமப் பகுதிகளிலே உள்ள, தலைவர்களும், பெருங்குடி மக்களும், தி. மு. கழகத்தின் போக்கு நியாயமானது என்பதை உணர்ந்து பாராட்டுகிறார்கள்.

மந்திரியாரின் தயவு தேடும் சிலரைப் பிடித்து, தி. மு. கழகத்தைத் தூற்றியும், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. அவர்களைத் தாக்கியும், கேவலப்படுத்தும் துண்டு நோட்டீசுகள் வெளியிட்டிருக்கிறார்கள்; ஆனால், யாரும் இதனால் ஏமாந்துவிடவில்லை.

(1) ராமசாமி மந்திரியானதால் வன்னிய மக்களின் குறைகள் தீர்ந்துவிட்டது என்பது உண்மையானால், மாணிக்கவேலர் மந்திரியான போது, ஏன் ராமசாமியார் கண்டித்தார்?

(2) காங்கிரசைத் தழுவித்தான் வன்னியருக்கு நன்மை செய்ய முடியும் என்று இப்போது ராமசாமியார் பேசுகிறாரே இதையே தேர்தலின் போது பேசிய சீனுவாச படையாச்சியை ஏன் குலத் துரோகி என்று கண்டித்து, தேர்தலில் தோற்கடித்தார்?

(3) வன்னியர் முன்னேற்றத்துக்காக ஒரு இலாகா ஆரம்பித்து, கோடி ரூபாயாவது ஒதுக்கி வைத்து ராமசாமியாரிடம் ஒப்படைத்து வன்னியருக்கு நன்மை செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறதா?

இந்த மூன்று கேள்விகள், எந்தக் கிராமத்திலும் கேட்கப்படுகின்றன. மந்திரியின் ஆதரவாளர்கள், "போகட்டும்—நம்மவர் — மந்திரியாகி இருக்கிறார்—பாவம்" என்பது தவிர வேறு பதில் அளிக்க முடியாமல் திணறுகிறார்கள்!

'எப்போது கருப்புக் கொடி காட்டுவது?"—என்று கேட்கும் கடிதங்கள் குவிகின்றன; கண்டனங்கள் ஏராளமாக வந்துள்ளன.

தி. மு. கழகத்தில் உள்ள வன்னியர்களில் பலர், "தி. மு. கழகம், இப்போது கருப்புக் கொடி காட்டாவிட்டால், எங்களுக்கு அனுமதி தாருங்கள்—வன்னியர் என்ற முறையில், நாங்கள், வன்னியரைக் காட்டிக் கொடுத்த கனம் ராமசாமிக்கு கண்டனம் தெரிவித்தாக வேண்டும்"—என்று வற்புறுத்துகிறார்கள்.

தென் ஆற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் பாலகுருசாமி அவ்வப்போது, கடிதம் அனுப்பி, அனுமதி கேட்டவண்ணம் இருக்கிறார்.

எதிர்ப்பு பலமாக இருக்குமிடத்தில், கனம் ராமசாமி, "நான் காங்கிரசில் சேர்ந்துவிடவில்லை; உழைப்பாளர் கட்சியைக் கலைத்து விடவில்லை" — என்று சாகசம் செய்கிறார்!

காங்கிரஸ் வட்டாரத்தில் குலவும்போது, "நான் காங்கிரசில் சேர்ந்துவிட்டேன்; வன்னியர்களைக் காங்கிரசில் சேரும்படி அறிக்கை விடப் போகிறேன்; உழைப்பாளர் கட்சியைக் கலைத்து விடுகிறேன்,"—என்று பேசுகிறார்!

திண்டிவனத்தில் வன்னியர் மாநாடு கூட்டி, அதிலே, உழைப்பாளர் கட்சியைக் கலைத்துவிட்டு, எல்லா வன்னியரும் காங்கிரசில் சேர்ந்துவிட வேண்டும் என்ற தீர்மானம் கொண்டு வர, கனம் ராமசாமி திட்டமிட்டிருக்கிறார்; இதற்காக 'ஆள் அம்பு' திரட்டப்பட்டு வருகிறது.

"ஆனால், திண்டிவனம் தோழர் கோபால கவுண்டர் இதற்கு இடம் தர மறுத்துவிட்டார். அவர் இல்லத்தில் வந்திருந்த கிராம பெரியதனக்காரர்கள், 'வன்னியர்கள் காங்கிரசில் சேருவது கூடாது,' என்று தெரிவித்துவிட்டனர். உடனே 'கனம்' ஆதரவாளர்கள் வெளி ஏறி, மாநாட்டுக்கு வேறு வரவேற்புக்குழு அமைத்துக் கொண்டுள்ளனர்."

"இந்நிலையில், திருக்குறள் முனுசாமி, எம். பி., முன் வந்திருக்கிறார்."

புரட்சிக் கொடியை உயர்த்தியுள்ள தோழர் கோபால கவுண்டருடன் கூடி நின்று, திருக்குறளார் கடமையைச் செவ்வனே செய்வார் என்று பலரும் எதிர்பார்க்கிறார்கள்.

ஒரு பெரிய சமூகம், அரசியலில் இன்று பெற்றுள்ள தனிச் சிறப்பை, ஒரு தனி நபருக்கு மந்திரி வேலை கொடுத்து, கெடுத்துவிடும் சதித் திட்டத்தை விளக்கி 'வன்னியப் பெருங்குடி மக்களை நல்வழியில் கொண்டு செல்ல திருக்குறளார் முயற்சிப்பார் என்று வன்னியகுல வாலிபர்கள் நம்புகிறார்கள்.

திண்டிவனத்தில் 13-ந் தேதி நடைபெறும் கூட்டத்தில், திட்டவட்டமான முடிவு எடுத்து, அரசியல் நேர்மையையும், கண்ணியத்தையும் காப்பாற்ற வேண்டும்.

ஜில்லா போர்டு தேர்தலில், 'கனம்' ராமசாமியாரின் போக்கு எப்படி இருக்கும் என்பது தெளிவாகவில்லை.

உழைப்பாளர் கட்சியின் பேரால் சிலர் நிற்பது என்றும், அவர்களைக் காங்கிரசார் எதிர்ப்பதில்லை என்றும், அதுபோலவே காங்கிரசில் சிலர் நிற்பது என்றும், அவர்களிடம் உழைப்பாளர் கட்சி போட்டியிடுவதில்லை என்றும் ஏற்பாடு பேசப்பட்டு வருகிறதாம்!

ஆனால், வெற்றி பெற்ற பிறகு, உழைப்பாளர் கட்சி, காங்கிரசுடன் சேர்ந்துவிடுமாம்!

இத்தகைய சூதுத் திட்டம் இருப்பது தெரிந்த வன்னிய மக்களில் பலர், உழைப்பாளர் கட்சி உருப்படாது என்று தெரிந்துவிட்டால், உழவர் கட்சி துவக்குவது என்ற முடிவு செய்திருக்கிறார்கள்.

திண்டிவனத்தில் திருக்குறளார் கலந்து கொள்ளும் கூட்டம், தென் ஆற்காடு மாவட்ட அரசியலிலும், வன்னிய மக்களின் அரசியல் வாழ்விலும், மிக முக்கியமான கட்டமாகும்.

மாணவர்கள் மீது போலீசார் பிரம்படிப் பிரயோகம்!

பாடியாலாவில் சர்க்கார் போக்கை எதிர்த்து மாணவர்கள் கிளர்ச்சி

கம்யூனிஸ்டுகள் தூண்டினர் என்கிறது சர்க்கார்

சர்க்கார் மருத்துவக் கல்லூரியான பாடியாலா மெடிகல் கல்லூரியில், சர்க்கார் தான் விரும்பும் மாணவர்களை நியமிக்க நான்கு இடங்களை சர்க்காருக்கென்று ரிசர்வ் செய்ய முடிவு செய்துள்ளனர்.

இந்த முடிவை ஆட்சேபித்து 500-க்கு மேற்பட்ட மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி நகரெங்கும் ஊர்வலம் வந்தனர்.

கலைந்துபோகுமாறு கூறிய போலீசாரின் உத்திரவுக்கு இணங்க மாணவர்கள் மறுக்கவே போலீசார் மாணவர்களைப் பிரம்பாலடித்தனர்.

மாணவர்களுக்கு ஆதரவாக புத்தக வியாபாரிகள் தங்கள் கடைகளை மூடினர்.

சர்க்கார் காரியாலயத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களில் 30 பேரைப் போலீசார் நிறுத்தி வைத்துக்கொண்டனர்.

இந்த மாணவர்களின் கிளர்ச்சிக்கு அகாலிதளத்தினரும், கம்யூனிஸ்டுகளுமே காரணமாவர் என்று சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

வெற்றியா? தோல்வியா?—உடனே முடிவு செய்யுங்கள்

ஜினிவா மாநாட்டில் ஈடன் எச்சரிக்கை

"நம்மிடையே காணப்படும் வேற்றுமைகளைப் போக்க வேண்டும்; அல்லது மாநாட்டின் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும்," என்று பிரிட்டிஷ் பிரதிநிதி ஈடன் ஜினிவா மாநாட்டில் கூறினார்.

"ஏழு ஆண்டுகளாக நடைபெறும் இந்தோ-சீனப் போரை நிறுத்துவது பற்றிய பேச்சு வார்த்தைகளில் சில நாட்களாக மேற்கு, கிழக்கு நாடுகளிடையே ஏராளமான வேற்றுமைகள், மாறுபட்ட எண்ணங்கள் மலிந்துவிட்டன," என்று அவர் மேலும் கூறினார்.

நம் நாடு

தி.மு.கழக தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 11-6-54 வெள்ளி

வழிசெய்ய வேண்டும்!

மாவட்ட ஆட்சி மன்றங்களின் தேர்தல் அண்மையில் நடைபெற இருக்கிறது. தேர்தல் நடைபெறும் தேதி திட்டவட்டமாக இன்னும் குறிப்பிடப்படவில்லையாகிலும், தேர்தல் சீக்கிரத்தில் நடைபெற இருக்கிறது என்பது மட்டும் நிச்சயமாகியிருக்கிறது.

ஆச்சாரியார் அமைச்சர் குழு காலத்தில், இந்த மாவட்ட ஆட்சி மன்றங்களின் எதிர்காலம் நிச்சயமற்றுக் கிடந்தது. மாவட்ட ஆட்சி அமைப்புகளைக் கலைத்துவிட்டு அதற்குப் பதில், ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்பு நடைமுறையில் இருந்துவந்த வட்டார ஆட்சிக் கழகங்களை மீண்டும் புதுப்பிப்பது என்ற முயற்சியில், அவர் ஆட்சி தலையிட்டது. அந்தக் கருத்தை வெளிப்படையாக அவ்வமைச்சர் குழு அறிவிக்கவும் செய்தது.

காங்கிரஸ் கட்சியினருக்குள்ளாகவே, ஆச்சாரியார் அமைச்சர் குழுவிற்கு எதிராகக் கிளம்பிய எதிர்ப்புக்கான காரணங்களில், மாவட்ட ஆட்சி மன்றக் கலைப்பு முடிவும் ஒன்றாகும். எதிர்ப்பின் வேகத்தைத் தணிக்க, மாவட்ட ஆட்சி மன்றங்களின் தேர்தலை உடனடியாக நடத்திவிடுவது எனவும், தேர்தல் நடைபெற்று முடிந்த பின்னர், வட்டார ஆட்சிக் கழகங்களை உருவாக்குவது எனவும் ஆச்சாரியார், ஒரு தந்திரத்தைக் கையாள முன்வந்தார். அந்தக் கூற்றினாலும், இத்துறையில், அவருக்கு ஏற்பட்ட எதிர்ப்பு அடங்கிவிடவில்லை. மாறாக எதிர்ப்பு நிலைத்து வளர்ந்தே வந்தது.

காமராஜர் அமைச்சர் குழு, மாவட்ட ஆட்சி மன்றங்களின் தேர்தலை, மேலும் காலம் தாழ்த்தாமல் நடத்துவதற்கு இசைந்துள்ளது. தொடர்புள்ள அமைச்சரின் வாயுரையில், அதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிப்பும் அடங்கி இருக்கிறது.

நீண்ட காலத் தேவையாக உள்ள மாவட்ட ஆட்சி மன்றங்களின் தேர்தலை நடத்த முன்வந்த, காங்கிரஸ் அமைச்சர் குழு வாக்குப் பதிவு செய்வதில் ஒரு புதிய முறையைக் கையாளப் போவதாக அறிவித்திருக்கிறது. சர்க்கார் புகுத்த இருக்கும் வாக்குப் பதிவு ஏற்பாடு, புத்தம் புதிய முறையல்ல; ஏற்கனவே தேர்தல்களில் கையாளப்பட்டு வந்த, 'சுதந்திர' அரசாங்கத்தால் ஒதுக்கித் தள்ளிவிடப்பட்ட, பொருத்தமற்ற முறையேயாகும்.

ஒரு தேர்தல் தொகுதியில் நிற்கும் அபேட்சகர்களின் பெயர்களை தமிழ் அகர வரிசையில், சிறு காகிதத்தில் அச்சடித்து, அவர்கள் பெயருக்கு நேராக, வாக்காளர்கள் குறியிட வேண்டிய இதே வாக்குப் பதிவு முறைதான் ஏகாதிபத்திய ஆட்சி காலத்தில் நடைமுறையில் இருந்து வந்தது.

இந்தக் குறியிடும் முறை வெற்றி பெற வேண்டுமானால், வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ள வாக்காளர்கள் அனைவரும் ஓரளவிற்கு எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். படிப்பற்றவர்களிடம் இம்முறை புகுத்தப்பட்டால் வாக்குப் பதிவு, எதிர்பார்ப்பதுபோல் ஒழுங்காக நடைபெற முடியாது; இரகசிய வாக்குப் பதிவு முறையும் வெற்றி பெறாது.

அந்தக் காலத்தில் தேர்தல் அதிகாரியாக இருப்பவர், எழுதப் படிக்கத் தெரியாத வாக்காளர்களின் கருத்தை, வெளிப்படையாகக் கேட்டறிந்து, அபேட்சகர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில், வாக்குச் சீட்டில் குறியிடுவது வழக்கம். இதனால், வாக்காளர்கள், தேர்தலில் கலந்துகொள்ளும் அபேட்சகர்களின் அச்சுறுத்தலுக்கும், ஆசை மொழிகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டியவர்களானார்கள். அபேட்சகர்களின் தாட்சண்யத்திற்கும் தயவுக்கும் கட்டுப்பட வேண்டிய வாக்காளர்கள், தேர்தலில் தங்கள் உரிமைகளைச் செலுத்த முன்வராமலேயே, இருந்துவிடும் இருக்கிறார்கள். எனவே, ஒரு தேர்தலில் பதிவாகும் வாக்காளர் எண்ணிக்கை மொத்தமும் சராசரி குறைவாகவே இருந்து வந்திருக்கிறது. இன்னும் பல குறைபாடுகள் உண்டு இம்முறையில் இவ்வளவும் அனுபவ உண்மைகள்.

மேற்கூறிய குறியிடும் முறையில் ஏற்பட்டுவந்த குறைபாடுகளைத் தவிர்க்கவும், மறைவு வாக்குப் பதிவை வெற்றியாக நடைமுறைக்குக் கொண்டுவரவும், [illegible] வது ஜனநாயக முறை நடைபெறுவதாகக் காட்டிக் கொள்ளவும், பழைய வாக்குப் பதிவு செய்யும் ஏற்பாட்டை மாற்ற வேண்டிய கட்டாயமேற்பட்டது சுயராஜ்ய அமைப்பில்.

எனவே, பழைய முறைக்குப் பதிலாக, தேர்தலில் கலந்துகொள்ளும் அபேட்சகர்களுக்கு, தனித்தனி அடையாளச் சின்னங்கள் வழங்கப்பட்டன. பெரும்பான்மையான படிக்காத வாக்காளர்கள், தங்கள் விருப்பப்படி, சுதந்திரமாக — இரகசியமாக வாக்களிப்பதும், அதனால் ஓரளவு சாத்தியமாயிற்று.

கல்விக் கண் பெற்றிருக்கவில்லையானாலும், பிறவிக் கண் பெற்றிருந்தால் போதும், ஒரு வாக்காளர் தன் கருத்தை [illegible] குறிப்பிட்ட [illegible] வாக்களிப்பது [illegible] என் [illegible] புதிய வாக்குப் பதிவு ஏற்பட்டால் [illegible] எனவே புதிய ஏற்பாடு, நாட்டின் மக்கள் தேர்தல்களுக்கும் மேற்கொள்ளப்பட்டது.

புதிய வாக்காளர் பதிவு முறை, எதிர்பார்த்ததற்கு மேல் வெற்றியைக் கொடுத்திருக்கும்பொழுது, அம்முறையை மாற்றி, குறைபாடு உடைய பழைய — வேறு முறையை, மாவட்ட ஆட்சித் தேர்தலுக்கு மட்டும் புகுத்த சர்க்கார் முன்வருவது என்றால், அதில் ஏதோ இரகசியம் இருக்கிறது எனச் சாதாரண அறிவினரும் அச்சங்கொள்ள இடமிருக்கிறது. ஐயம் ஏற்பட்டுவிட்ட பிறகு, அதன் தன்மைக்கேற்ப பல குற்றங் குறைகள் கூறுவது எதிர்பார்க்கக் கூடியதேயாகும்.

ஏதோ அற்புதமான புதிய மாற்றத்தைத் தம் பதவி காலத்தில் செய்து இருக்கிறோம் என, பாமர மக்களிடம் பாராட்டுக் கூலிகொள்ளும் அற்ப ஆசையினால் தான், குப்பையில் தள்ளிவிட்ட குறைபல உள்ள பழைய வாக்குப் பதிவு முறையை, தொடர்புள்ள அமைச்சர் அரங்கேற்றப் பார்க்கிறார் என்று விஷயமறிந்தவர் கட்டாயம் கூறுவர்.

ஒரு தனி அமைச்சர் செய்கிற அக்கிரமம், கூட்டுப் பொறுப்புடைய அமைச்சர் குழுவைக் கட்டாயம் சார்ந்தே தீரும் என்பதில் ஐயமில்லை. எனவே, எதிர்ப்பு தீவிரமாவதற்குள்ளாகவே, முதல் மந்திரி, குட்டி மந்திரியின் நினைப்பை மாற்றிக் கொள்ள வழி செய்ய வேண்டும்.

அகிலத்தை ஆட்கொள்ளும் அமெரிக்க மூலதனம்

உற்பத்தியைப் பெருக்கவா? உள்நாட்டுக் கலகத்தை மூட்டவா?

வெளிநாட்டு மூலதனம் பற்றிய புள்ளி விவரம்

புதுடில்லி, ஜூன் 8—

பின்தங்கிய நாடுகளில் மட்டுமின்றி பொருளாதார முன்னேற்றம் பெற்றுள்ள பல நாடுகளிலும், உற்பத்திப் பெருக்கத்திற்காக, கேரிலையான வெளிநாட்டு மூலதனம் வெகுவாக, மேற்கொள்ளப்பட்டிருப்பதாக, ஐ. நா. சபையின் பொருளாதார இலாக்கா குறிப்பிட்டுள்ளது.

உலகத்திலேயே வெளிநாடுகளுக்கு அதிகமான மூலதனத்தை ஏற்றுமதி செய்திருக்கிற அமெரிக்கா, 1952-ம் ஆண்டு முடிவில் 9,996 கோடி ரூபாய்களை டாலர் ரூபத்தில் வெளிநாடுகளில் விதைத்திருக்கிறது. 1946 52-ம் ஆண்டுகளுக்கிடையில் சராசரியாக 4,349 கோடி ரூபாய்களை அமெரிக்கா வெளிநாடுகளில் அள்ளி இருக்கிறது.

நாடுவாரியாக அமெரிக்க மூலதனத்தின் அளவு மில்லியன் டாலர்களில் (ஒரு மில்லியன் டாலர் 4 76,000 ரூபாய் ஆகும்) வருமாறு:—

இங்கிலாந்து	847
ரஷியா நீங்கிய ஐரோப்பா	878
கனடா	579
ஆஸ்திரேலியா	201
நியூசிலாந்து	75
தென் ஆப்பிரிக்கா	140
அர்ஜெண்டைனா	356
பிரேசில்	644
மெக்சிகோ	415
பனாமா	34
சிலி	2540
கியூபா	642
வெனிசூலா	993
மத்திய அமெரிக்க குடியரசுகள்	79
இந்தியா	38
பாகிஸ்தான்	8
பிலிப்பைன்ஸ்	58
எகிப்து	39
இஸ்ரேல்	15
லைபீரியா	82
இங்கிலாந்தின் சார்புடை நாடுகள்	297
ஆப்பிரிக்காவில் உள்ள இதர ஐரோப்பிய நாடுகள்	43
இதர நாடுகள்	659
	9637

மொத்தமாக 9.637 மில்லியன் டாலர் முதலீடுகளை அமெரிக்கா வெளிநாடுகளில் கொண்டுள்ளது.

சென்னை கவர்னருக்கு வரவேற்பு இல்லை!

பெல்லாரி நகராட்சி மன்ற முடிவு

ஜூனில் பெல்லாரிக்கு வரவிருக்கும் சென்னை கவர்னருக்கு வரவேற்பு அளிப்பதில்லை என்ற தீர்மானத்தை பெல்லாரி நகராட்சி மன்றம் நிறைவேற்றி இருக்கிறது.

ஆந்திர சர்க்கார் ஊழியர் பிள்ளைகள் கல்வி பெற!

கர்நூல் உயர் நிலைப் பள்ளிகளில் தமிழ்

ஆந்திர மாநில சர்க்காரின் தலைநகராகக் கர்நூல் இருக்கிறது.

மாணவிகளுக்கு இரண்டு, மாணவர்களுக்கு மூன்று என அந்நகரில் ஐந்து உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன.

ஆந்திர சர்க்கார் காரியாலயங்களில்பணிபுரியும் சென்னையிலிருந்து சென்றுள்ள, சர்க்கார் ஊழியர்களின் மக்களுக்குக் கல்வி பெறும் ஏற்பாடு செய்யவேண்டி இருக்கிறது. அதற்காக, உயர்நிலைப் பள்ளிகளில் தமிழும், ஆங்கிலமும் போதனா மொழியாக ஏற்பாடு செய்ய சர்க்கார் தீர்மானித்திருக்கிறது.

ஆங்கிலத்திலும் தமிழிலும் போதனை தரவேண்டிய அளவிற்கு, பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதற்கான, கூடுதலான மாணவர் தொகை இருக்குமா என்பது இன்னும் விளக்கமாகத் தெரியவில்லை.

டாக்டர்களின் குழந்தைகள் படிப்பு

கல்லூரி அமைக்க டாக்டர்களுக்கு யோசனை

பம்பாய், ஜூன் 10—

அகில இந்திய மெடிகல் கவுன்சிலின் தலைவர் சி. என். பட்டேல் "டாக்டர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளை டாக்டர்களாக்கத் தனியாகத் தாங்களே ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதே சரியான வழி" என்று கூறினார்.

டாக்டர்களின் குழந்தைகள் டாக்டர்களாக வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்றும், ஆனால் பரீட்சையில் அதிக மார்க்குகள் பெறாதக் காரணத்தால் மருத்துவக் கல்லூரியில் சேர இயலவில்லை என்றும் அவர் கூறினார்.

பார்வையில்லா மாணவர்கள்

பி. ஏ. பரீட்சையில் வெற்றியடைந்தனர்

ஹைதராபாத்தைச் சேர்ந்த இரண்டு கண் பார்வையில்லா மாணவர்கள் உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் பி. ஏ. பரீட்சையில் வெற்றி பெற்றனர்.

நகரம் கல்லூரியைச் சேர்ந்த ஆப்ரகாம் லிங்கன் என்ற மாணவரும், யூனிவர்சிடி காலேஜைச் சேர்ந்த சையத் உசைன் என்ற மாணவரும், இந்திய சர்க்கார், உஸ்மானிய பல்கலைக் கழகம் இவைகளிடமிருந்து உபகாரச் சம்பளம் பெற்றுப் படித்தனர்.

மேலும் அவர்கள் தங்கள் படிப்பைத் தொடர்வார்கள் என்று தெரிகிறது.

பெங்களூர்—சேலம் ரயில் பாதை

விரைவில் துவங்கும்

பெங்களூர், ஜூன் 9—

இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் இந்திய சர்க்கார் துணை அமைச்சர் ஓ. வி. அளகேசன், சேலம்—பெங்களூருக்கு இடையே 130 மைல் நீளமுள்ள ரயில் பாதை சீக்கிரமே அமைக்கப்படும் என்று கூறினார்.

இதற்காக எஞ்சினீயரிங் சர்வே ஏற்பாடுகள் விரைவில் நடைபெறும்.

மூன்று கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் பெங்களூர்—சேலம் பகுதிகளிடையே வியாபாரம் அதிகமாகும் என்று அவர் மேலும் கூறினார்.

கொத்தலாவலைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

எதிர்கட்சியினர் கொண்டு வருவர்

இலங்கைப் பிரதமர் ஜான் கொத்தலாவலை மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் பண்டாரநாயகா கொண்டு வருவார் என்று நிச்சயமாக நம்பப்படுகிறது.

இலங்கையில் சர்க்கார் நிறைவேற்றப் போகும் திட்டங்கள் பற்றி, தங்கள் தொகுதியில் மூன்று திட்டங்களைத் தேர்ந்தெடுக்குமாறு பிரதமர் கொத்தலாவலை சர்க்கார் கட்சி உறுப்பினர்களுக்கு மட்டும் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார் என்று தெரிகிறது.

டெல்லி மாநில — மதுவிலக்குக் கொள்கை

ஆராய விசாரணைக் குழு!

டெல்லி மாநிலத்தின் மதுவிலக்குக் கொள்கை பற்றி ஆராய ஒன்பது பேர் அடங்கிய விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

டெல்லி அனை மந்திரியான திருவிக்சான் குப்தா இந்தக் குழுவின் தலைவராயிருப்பார்.

மதுவிலக்கு பற்றி இந்திய அரசியல் சட்டம் 47ம் பிரிவில் கண்டுள்ளபடி, எந்த நிலையிலும், முறையிலும் டெல்லி மாநிலத்தில் மதுவிலக்கு அமுல் செய்யப்படலாம் என்பதையும், மதுவிலக்கினால் ஏற்படும் பொருளாதாரப் பிரச்னைகளைச் சமாளிப்பது பற்றியும், நகரத்தின் 'காஸ்மோ பாலிட்டன்' முறைக்கு உகந்தவாறு அரசாங்கத்தின் கலால் வருமானம் பற்றிய கொள்கையை வகுத்துக் கொள்வது என்பதை பற்றியும் இந்த விசாரணைக் குழு ஆராயும்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரைக்கு ஊராட்சி மன்றம் வரவேற்பு

தாராபடவேடு (காட்பாடி) ஊராட்சி குடிதண்ணீர்க் குழாய் திறப்பு விழா

மக்கள் நலத்தைப் பாதுகாக்க வேண்டுகோள்

காட்பாடி, ஜூன் 7—

6—6—54 காலை 9 மணிக்கு காட்பாடி தாராபடவேடு ஊராட்சி மன்றத் தலைவரும், நிர்வாக அதிகாரிகளும், பொது மக்களும், உறுப்பினர்களும் பொதுச் செயலாளர் அண்ணாதுரையை வரவேற்று மலர்மாலைகள் சூட்டினார்கள்.

நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபத்தில், தலைவர் எம். கிருஷ்ணராஜ் அவர்கள் தலைமையில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கட்கு வரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுக்கப்பட்டது.

பொதுச்செயலாளர் அவர்கள் வரவேற்புக்குத் தக்க பதில் கூறினார்.

நிர்வாக அதிகாரி சிட்டிபாபு அவர்கள் நன்றி கூறினார்.

★

குடிதண்ணீர்க் குழாய் திறப்பு

காலை 11-30 மணிக்கு காட்பாடி தாராபடவேடு ஊராட்சி மன்றத்தாரால் பொதுமக்கட்குக் குடிதண்ணீர் குழாய்கள் அமைத்திருந்ததை தோழர் வீரபத்திரன் தலைமையில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் திறந்துவைத்து, வரி கொடுக்கும் பொதுமக்கட்கு ஊராட்சி மன்றத்தாரால் இது போன்ற வசதிகளும், மருத்துவ விடுதிகளும், கல்வி நிலையங்களும், ரேடியோ நிலையங்களும், சுகாதார வசதிகளும் செய்து கொடுத்து மக்கள் நலத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டியது மிக மிக முக்கியம் என்று குறிப்பிட்டார்; ஊராட்சி மன்றத்தார் நன்முயற்சிகளைப் பாராட்டினார். தலைவர் தோழர் எம். கிருஷ்ணராஜ் நன்றி கூறினார்.

★

தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

அன்று மாலை 6-30 மணிக்கு காட்பாடி தி. மு. கழகக் கிளை சார்பில் வ. உ. சி. பூங்காவுக்குப் பக்கத்தில், தோழர் எம். கிருஷ்ணராஜ் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, அ. பொன்னம்பலனார், பொதுச்செயலாளர் அண்ணாதுரை ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளையும், சமூக — அரசியல்—பொருளாதார விடுதலை குறித்தும், புதுக் கல்வித் திட்டம் ஒழிந்த வெற்றி நாள் கொண்டாடியது பற்றியும் விளக்கிப் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பிறகு நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

☆

வேலூரில் நாடகக் கலை விழா நிகழ்ச்சி

அன்று இரவு வேலூர் மாநகராட்சி பள்ளிக்கூட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற நாடகக் கலை விழா நிகழ்ச்சியில் நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்கள் நடிக்கும் "இன்பக் கனவு" நாடகத்திற்குப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமை வகித்தார். நாடகம் முடிந்த பிறகு அண்ணாதுரை அவர்கட்கும், நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கட்கும் வரவேற்பு மடல்கள் படித்துக் கொடுக்கப்பட்டன. நாடகத் துறையில் மறுமலர்ச்சியும், பகுத்தறிவுக் கருத்துக்களும் மக்களிடை அதிகம் பரவி வருவதைப்

பாராட்டிப் பேசியபின், நன்றி கூற நாடகம் முடிவு பெற்றது.

★

ஒட்டன் சத்திரம் தி. மு. கழகம்

பொதுச்செயலாளர் அண்ணாதுரை கொடியேற்றி வைத்தார்

மதுரை மாவட்டம் ஒட்டன் சத்திரம் தி. மு. கழகச் சார்பில் 4—6—54 காலை 8-30 மணிக்கு பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தி. மு. கழகக் கொடியை ஏற்றிவைத்தார். மலர் மாலைகள் சூட்டியபின், "திராவிட நாடு திராவிடருக்கே." என்று மக்கள் முழங்கினர்.

★

கள்ளக்குறிச்சியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

தலைவர்கள் சொற்பொழிவு

கள்ளக்குறிச்சி தி. மு. கழகச் சார்பில், 4—6—54 மாலை 6-30 மணிக்கு தோழர் க. வேலாயுதம் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள்: ஈ. வே. கோவிந்தசாமி, எம். எல். ஏ., இரா. நெடுஞ்செழியன், அ. பொன்னம்பலனார், பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள், "திராவிட நாடு திராவிடருக்கே" என்று கூறுவதின் நோக்கம் பற்றியும், மும்முனைப் போராட்டத்தில் நாம் கண்ட வெற்றிகள் குறித்தும் விளக்கிப் பேசினர்.

• • •

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் இப்பொதுக் கூட்ட முடிவில் மூன்று குழந்தைகட்கு முறையே "மலர்க்கொடி" "பாண்டியன்" "சேரன்" என்று பெயர் சூட்டினர்.

* * *

வாழ்க்கை ஒப்பந்தம்

இக்கூட்டத்தில், தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் பேசுவதற்கு முன்பு, (வேளாண்தல்) தோழர் கோ. முத்துச்சாமி — (ஆரியபாளையம்) தோழியர் இ. அலர்மேலு அம்மாள் திருமணத்தை பொதுக்கூட்டத்தின் மேடையிலேயே நடத்தி வைத்தார். மணமக்கள் மலர் மாலைகள் சூட்டிக் கொண்டு, மக்கள் முன்னிலையில், வாழ்க்கை ஒப்பந்த உறுதி கூறிக் கொண்டார்கள்.

எழும்பூர் — தாம்பரம் மெயின் லைன்

மின்சாரப் பாதையாகும்

புதுடில்லி, ஜூன் 9—

எழும்பூருக்கும் — தாம்பரம் ரயில்வே நிலையத்திற்கும் இடையேயுள்ள 15 மைல் மெயின் லைன் ரெயில்வே பாதையை மின்சார ரயில்பாதையாக மாற்ற இந்திய சர்க்கார் ஒப்புக்கொண்டு விட்டனர்.

இந்த ஆண்டே அந்த வேலை நடைபெறும் என்று தெரிகிறது.

மெயின் லைன் மின்சாரப் பாதையாக்கப்படுவதன் மூலம் அதிக வண்டிகள் விட இயலும் என்று தெரிகிறது.

இந்த 15 மைல் பாதை மின்சாரப் பாதையாக்கப்படுவது, பின்னர், எழும்பூர் — செங்கல்பட்டு வரையில் நீடிப்பதற்கு அடிப்படையாக அமையலாம் என்று கூறப்படுகிறது.

செய்திச் சுருள்

பன்னீர்செல்வம் நினைவுப் படிப்பகம்

30—5—54ல், மதுரை, பொன்னகரம், மீனாட்சி தோப்பிலுள்ள மேற்படி படிப்பகத்தின் செயற்குழு கூட்டம் தோழர் ஆர். வீராசாமி தலைமையில் கூடி பொன்னகரம், மணிநகரம் இரண்டையும் மேற்படி படிப்பகத்துடன் இணைத்து ஒன்பது வட்டங்களாகப் பிரித்து சந்தா வசூலிப்பதற்கு தோழர்கள் பலரை நியமிக்கப்பட்டது. இறுதியில், கல்வித் திட்ட ஒழிப்பு குறித்து சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

தூத்துக்குடி இளைஞர் முன்னேற்ற நாடகக் குழு

6—6—54 மாலை 6 மணிக்கு நாடகக் குழுவின் சார்பில், சிதம்பரக் கோயில் மைதானத்தில், தோழர் எம். வெங்கட கிருஷ்ணன் தலைமையில், கலைஞர் சென்ற குருஜி பார்ஜுனர் அவர்களின் நினைவு விழா நடைபெற்றது. பண்டித எம். பி. மன்மதன் பார்ஜுனர் உருவப் படத்தைத் திறந்து வைத்தார். பிரமுகர்கள் பலர் சிறப்புரை ஆற்றினர்.

மயிலை திருவள்ளுவர் கழகம்

6—6—54ல் நடைபெற்ற கழகக் கூட்டத்தில் தலைவராக மு. வெங்கடேசன், செயலாளராக ம. கி. கணபதி, துணைச் செயலாளராக மா. குப்புசாமி, பொருளாளராக வ. கிருட்டிணன், நிர்வாக உறுப்பினர்களாக எழுபேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழக 9-வது ஆண்டு விழாவை 18—7—54ல் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

தென்னிந்திய நாடார் மகாஜன சங்கம்

பம்பாய், ஜூன் 7—

30—5—54-ல், சங்க ஆண்டு நிறைவு விழா தோழர் ஏ. எம். தங்கையா தலைமையில் நடைபெற்றது. திரு எம். ஜேக்கப் நாடார் வரவேற்புரை ஆற்றினார். பின்னர் சென்னை முதலமைச்சர் காமராசர், டபுள்யு. பி. அ. சௌந்திர பாண்டியனார் படங்களை முறையே தோழர்கள் பி. செல்லத்துரை, வடவைக் குயில் ஆகியோர் திறந்து வைத்தனர். புத்தாண்டிற்கு சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். "முறைப் பெண்", "என் வாழ்வு" நாடகங்கள் நடைபெற்றன.

அன்பளிப்பு

"நம் நாடு" வளர்ச்சிக்காக கம்பம் தோழர் எஸ். மாணிக்கம் ரூ. 1 அன்பளிப்பாக வழங்கியதை தோழர் இரா. நெடுஞ்செழியன் மூலமாக வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

எம். எஸ். பெரியசாமி படிப்பக ஆண்டுவிழா

விருதுநகர், ஜூன் 7—

30—5—54 காலை 10 மணிக்கு படிப்பகத்தின் முதலாண்டு விழா தோழர் வே. வ. ராமசாமி, எம். எல். சி. தலைமையில் நடைபெற்றது. தலைவர் படிப்பகத்தின் செயலாற்றலைப் பாராட்டிப் பேசினார். பிறகு நகரசபை உறுப்பினர்கள் என். ரத்தினம், உசமான் பேசிய பின் மன்றத் தோழர் ஜெகதீசன் தலைவரின் பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார். அடுத்து தோழர் க. அன்பழகன் குறள் வழியை விளக்கிப் பேசுகையில், சென்னை சட்டசபையில் ஒரு உறுப்பினர், பிரமாணம் எடுக்கையில், கீதைக்குப் பதில் குறள் உபயோகப் படுத்தலாமே,' என்று கேட்டதற்கு மந்திரி கனம் பக்தவத்சலம் பதிலளிக்கையில், 'அது, மத நூல் ஆகாது' என்றாராம்; இப்படிப் பதிலளிப்பது மத சார்பற்ற அரசாங்கத்தின் செயலாகாது என்றார்.

அடுத்து, தலைவர் தனது முடிவுரையில் பேசுகையில், சட்டசபையில் அப்படிக் கேட்டது தான்தானென்றும், பிரமாணம் எடுக்கையில் கீதையை கொடுத்ததாகவும், தான் மறுத்துவிடவே பிறகு குறளின் மேல் பிரமாணம் எடுத்ததாகவும் பிறகுதான் அந்தக் கேள்வி கேட்டதாகவும் கூறினார்.

அன்று மாலை அம்மன்கோவில் திடலில் தோழர் ரத்தினம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அ. மீ. அலிச்சக் மனசூர், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, க. அன்பழகன் ஆகியோர் தி. மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கி விரிவுரையாற்றினர்.

சொற்பயிற்சி மன்றம்

முசுவை, ஜூன் 9—

30—5—54 மாலை 5-30 மணியளவுக்கு மன்றத்தின் 7-வது கூட்டம் தோழர் மு. மதிவாணன் தலைமையில் நடைபெற்றது. 'விஞ்ஞானம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் இளஞ்செழியன், புரட்சிவரம்பன், இலெ. சாதனையா, பாலன், இலிங்கம், விஜயன் முதலியோர் பேசியபின், தோழர் இளங்கோவன் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

திருச்சி மாவட்ட ஓட்டல் தொழிலாளர் சங்கம்

26—5—54 இரவு 10 மணியளவுக்கு தோழர் பி. கே. சங்கரன் தலைமையில் மகாசபைக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஆர். சுந்தரராசன், கிருஷ்ணமூர்த்தி முதலியோர் பேசியபின் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

****

நெல்லை மாவட்ட — தி. மு. கழக உறுப்பினர்க்கு

★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நெல்லை மாவட்டக் கிளை உறுப்பினர்களைக் கலந்து பேசி, ஆக்க வேலைகளுக்கான சிற்சில முடிவுகளை எடுக்க வேண்டியிருப்பதால், நெல்லை மாவட்டக் கழகத்தின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், ஏனைய உறுப்பினர்கள் ஆகியோர் இதனையே அழைப்பாகக்கொண்டு, 13—6—54 ஞாயிறன்று காலை முக்கூடலில் கூட வேண்டுகிறேன். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருக.

"அறிவகம்", சென்னை 9—6—54 } இரா. நெடுஞ்செழியன், துணைச்செயலாளர், தி. மு. கழகம்

****

திருமணங்கள்

ஒட்டன்சத்திரம்

4—6—54 காலை 9 மணிக்கு ஒட்டன் சத்திரத்தில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் கோவை தோழர் பஞ்ச மாலைச்சிரம்—தோழியர் சசிலா வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர் சோமசுந்தரம் அவர்கள் எல்லோரையும் வரவேற்று உபசரித்தார். தலைவர் முன்னுரை கூறியதும், மணமக்கள் மலர் மாலைகள் சூட்டிக் கொண்டபின் தாலி கட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர், தோழர்கள் அ. பொன்னம்பலனார், ஈ. வே. கி. சம்பத், என். முத்து, என். அப்பாவு ஆகியவர்கள் மணமக்களை வாழ்த்தி, சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம் குறித்து விரிவுரையாற்றினர். மணமக்கட்குப் பல தோழர்களால் மலர்மாலைகளும், வாழ்த்து மடல்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன.

மண மக்களால் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 10 அன்புடன் உதவியதை மகிழ்வுடன் பெற்றுக் கொண்டோம் — (நன்றியுடையது—பொறுப்பாளர்.

★

தேவபாண்டலம்:

கள்ளக்குறிச்சிக்கு அடுத்த தேவபாண்டலத்தில் தோழர் காசிஅப்பன்—தோழியர் கல்லம்மாள் திருமணம் 4—6—54 காலை 8-30 மணிக்கு தோழர் ஈ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மணமக்கள் மலர் மாலைகள் சூட்டிக் கொண்ட பின், தாலியும் கட்டப் பெற்றது. தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் க. வேலாயுதம் ஆகியவர்கள் மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரை கூறினர். தலைவர் முடிவுரைக்குப் பிறகு நன்றி கூறப்பட்டது.

மணமக்கள் சார்பில், 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்புடன் உதவினார்கள்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

பொதுச்செயலாளர் அண்ணாதுரை பாராட்டுதல்

இத்திருமணத்திற்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் காலையில் வர முடியாமல் ஒட்டன் சத்திரம் சென்றுவிட்டபடியால், இரவு கள்ளக்குறிச்சி பொதுக்கூட்டம் முடிந்ததும் தேவபாண்டலத்திற்கு வந்து மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரை கூறினார்.

* * *

6—6—54 காலை 9 மணிக்கு சென்னை சேப்பாக்கம், நெ 72, சி. என். கிருஷ்ணசாமி ரோட்டு செ. சத்திரத்தில், தோழர் க. பாண்டியனுக்கும்—தோழியர் பத்மாவதிக்கும் திருமணம் தோழர் கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். வி. நடராசன், மா. மோகன், ம. செ. த. மூர்த்தி, பா. கலைஞன் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

• • •

பெரம்பலூர் — மங்களத்தில், தோழர் க. குழந்தைவேலு—தோழியர் ப. மழலையம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம்; தோழர் க. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் கா. தமிழ்முத்து, கோ. பெரியபெருமாள், பை. கோ. தங்கராசன், டி. கே. திராவிடமணி ஆகியோர் பேசினர். திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ. 1 நன்கொடையாக அளிக்கப்பட்டது - வரப்பெற்றோம்-நன்றியுடையது—பொறுப்பாளர்.

உலக அரங்கில்

ஜெனீவா :
வி. கே. கிருஷ்ணமேனன் மாலடோவ், குரோமிகோவ், சௌ-என்-லாய் ஆகிய கம்யூனிஸ்டு தலைவர்களைச் சந்தித்து, இந்தோ-சீனப் போர் நிறுத்தம் பற்றிப் பேசினார்.

★

டமாஸ்கஸ் :
சாபிரியல் அசலி என்பவரை முதல் அமைச்சராகக் கொண்டிருந்த சிரிய சர்க்கார் ராஜினாமா செய்துவிட்டது.

★

கொழும்பு :
சென்ட்ரல் பாங்க் ஆப் சிலோன், பட்ஜெட்டில் எதிர்பார்க்கப்படும் பற்றாக் குறையைச் சரிக்கட்ட வேண்டியும், தேசிய நலத் திட்டங்களை நிறைவேற்றவும் 10 ஆண்டு கால வரம்புள்ள ரூ 7 கோடி கடன் எழுப்ப இலங்கை சர்க்கார் முடிவு செய்துள்ளனர் என்று அறிவித்தது.

★

பெங்காசி :
லிபியாவில் அமெரிக்காவுக்கு இராணுவதளங்கள் தருவது பற்றிப் பேச லிபியா பிரதமர் முன்தஸர் பெங்கிஸின் வாஷிங்டனுக்குச் செல்ல இருக்கிறார்.

★

கெய்ரோ :
எகிப்து, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் எல்லையில் உள்ள காசா கடற்கரை நாடுகளை தனதாகிக் கத்திலிருந்து விடுவித்து, அவைகளுக்குச் சுதந்திரம் வழங்குவதென்று எகிப்திய சர்க்கார் முடிவு செய்துள்ளது.

★

ஒட்டாவா :
கனடா தன் கோதுமையின் விலையை மீண்டும் குறைப்பது என்று முடிவு செய்திருக்கிறது; ஏற்றுமதியை அதிகரிக்கவே இந்த ஏற்பாடு செய்யப்படுகிறதாம்.

★

பாரீஸ் :
இந்தோ—சீனாவில் பிரான்சின் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ஜெனரல் எலி, பத்து நாட்களில் புதிய போர்த் திட்டமொன்றுடன் பாரிஸ் வந்து சேருவார் என்று தெரிகிறது.

★

பொகோட்டா :
கொலம்பியாவின் தலைநகரில் நடைபெற்ற மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தின்போது இராணுவத்துடன் ஏற்பட்ட கைகலப்பில் 15 பேர் மரணமடைந்தனர். இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்!

★

ஹேக் :
"சோஷலிஸ்டு கட்சியில் சேரக் கூடாது; அக்கட்சியின் கொள்கைகளைக் கேட்கக் கூடாது," என்று தடுக்கும் ரோமன் கத்தோலிக்க குருமார்களை எதிர்த்துப் போராட ஹாலந்து நாட்டின் மிகப்பெரும் கட்சியான தொழிற்கட்சி முடிவு செய்திருக்கிறது.

★

நியூயார்க் :
அமெரிக்காவின் நான்கு அம்ச உதவித் திட்டம் மற்ற நாடுகளின் முன்னேற்றத்திற்காகவே தயாரிக்கப்பட்டது என்று அமெரிக்காவில் இந்தியத் தூதுவராக இருக்கும் ஜி. எல். மேத்தா கூறினார்.

* * *

அமெரிக்கா, பொருளாதாரத் துறையில் ரஷ்யாவுடன் போட்டியிடவேண்டுமென்று, அமெரிக்க சர்க்காரின் வெளிநாட்டு உதவி ஆலோசகர் எரிக் ஜாகஸன் தெரிவித்தார்.

பெல்கிரேட் :
யுகோஸ்லேவியாவில் உள்ள தொழிற் சங்கங்கள்மீது மத்திய பிடி ஏதும் இருக்கக்கூடாது—அவைகள் சுதந்திரமாயிருக்க வேண்டுமென்று யூகோ உதவிப் பிரதமர் எட்வர்ட் கார்டெல்ஜ் கூறினார்.

★

பியூனஸ் அயர்ஸ் :
காந்தியடிகளின் வாழ்க்கை சரித்திரத்தையும், டாக்டர் இராதாகிருஷ்ணன் எழுதிய 'இந்தியாவின் வாழ்க்கை' என்ற நூலையும், ஸ்பானிஷ் மொழியில் மொழிபெயர்த்து வெளியிட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

★

நைரோபி :
வெள்ளையர்களுக்கு நடைபெற்ற விருந்து ஒன்றில், 'பிரிட்டன், கிழக்கு ஆப்பிரிக்க காலனி கொள்கையில் பலவீனமான கொள்கையுடன் நடப்பதால் தான் நிலைமை இவ்வளவு மோசமாயிற்று,' என்று ஒருவர் பேசினார்; இதை எதிர்த்து விருந்தில் கலந்துகொண்ட தளபதி ஜியார்ஜ் எர்ஸ்கின் வெளியேறினார்.

★

லண்டன் :
கொரியா சமாதானக் கமிஷனின் வேலைகளை, கமிஷனின் உறுப்பினரான போலந்து வேண்டுமென்றே தடை செய்கிறது என்ற குற்றச்சாட்டை போலந்து சர்க்கார் மறுத்திருக்கிறது.

★

மெல்போர்ன் :
புதிதாக அமைக்கப்பட்ட ஆஸ்திரேலியப் பார்லிமெண்டில் இப்போது ஆட்சியில் உள்ள மென்சிஸ் சர்க்காருக்கு 7 பேர் கொண்ட மெஜாரிடிதான் இருக்கிறது.

★

டோக்கியோ :
உலக நீதி மன்றத்தின் விமானங்களுக்காக நான்கு நீதிபதிகளின் பெயரைத் தெரிவிக்குமாறு ஐ. நா. சபை ஜப்பானிய சர்க்காரைக் கேட்டிருக்கிறது.

* * *

அமெரிக்கக் கப்பற் படையினைச் சேர்ந்த விமானம் ஒன்று ஜப்பானிய எல்லையில் இவா தீனி—ஹாங்காங் இடையே பறந்து செல்லும் போது காணாமற் போயிற்று என்று தெரிகிறது.

★

ஹாங்காங் :
இந்தோ—சீனாவில் உள்ள மிகப் பெரிய பிரான்சின் வெடி மருந்து சாலை ஒன்றுக்குத் தீ வைத்து விட்டதாக வியட்மின் துருப்புகள் தெரிவித்தன.

★

இஸ்தான்புல் :
இராணுவ இரகசியங்களை அறிய முயற்சித்ததாகவும், வெடி குண்டுகள் வைத்திருந்ததாகவும் எட்டு பல்கேரிய ஒற்றர்களைத் துருக்கிப் போலீசார் கைது செய்தனர்.

★

சாலிஸ்பரி :
தென் ரொடீஷிய ரயில்வே தொழிலாளர்கள் தலைவர் தண்டனை பெற்று, பாதுகாப்புடன், கேப்டவுனுக்கு விமான மூலம் புறப்பட்டார். அங்கிருந்து அவர் பிரிட்டன் செல்வார் என்று தெரிகிறது.

★

சார்ல்ஸ்டன் :
[illegible]

செய்திக்கதிர்

விலை சரிவு
தேங்காய் எண்ணெயின் விலை மிகவும் குறைந்து போயிருக்கிறது. இதன் காரணமாய் ஆலப்புழை மார்க்கெட்டில் வியாபாரிகள் மிகவும் கவலைப்படுகின்றனர்.

★

அடிச் சுவடு
ஏறக்குறைய 22,000 அடி உயரம் இமயமலை மீது ஏற முயன்ற பிரிட்டிஷ் மலை ஏறும் குழுவினர் தோல்வி அடைந்தனர். அவர்கள் 15,000 அடி உயரத்தில் பனி மனிதனின் அடிச்சுவடுகளைக் கண்டதாகக் கூறுகின்றனர்.

★

டெலிபிரிண்டர்
தேவநாகரி லிபியிலேயே பத்திரிகைகளுக்குச் செய்திகள் அனுப்பும் டெலிபிரிண்டர் சர்வீஸ் முதல் முதலாக பாட்னாவுக்கும்—டில்லிக்கும் இடையே ஆரம்பமாயிற்று.

★

வரவேற்பு
இம்மாதக் கடைசியில் காஞ்சிபுரத்திற்கு வரும் சென்னைப் பிரதமர் காமராஜ் அவர்களுக்கு நகர சபையின் சார்பில் வரவேற்பளிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

★

ஆராய்ச்சி
இந்திய சர்க்காரால் அனுப்பப்பட்ட இரண்டு விஞ்ஞானிகள், மூன்று மாத காலமாக வட குஜராத்தில் உள்ள அபு, ஆரவல்லி மலைப்பிரதேசங்களில் யுரேனியம் உட்பட பல அபூர்வ தாதுப் பொருள்கள் கிடைக்குமா என்று ஆராய்ச்சி செய்கின்றனர்.

★

ஏழைகளுக்கு நிலம்
காடு வளர்ப்புக்கு பாதகம் ஏற்படாத வகையில் காடுகளில் உள்ள நிலங்களை ஏழைகளுக்குக் கொடுப்பது பற்றி ஆராய்வதாக மதுரையில் பேசும்போது சென்னை அமைச்சர் பக்தவத்சலம் கூறினார்.

★

தாக்குதல்
புதுவையில் உள்ள பிரிட்டிஷ் உதவி கான்சல் பார்லோவின் காரும், ரோடியர் மில்லுக்குச் சொந்தமான காரும் காட்டுப்பாளையத்திற்கருகே தாக்கப்பட்டதாம்.

★

டெலிபோன்
நேரடியாக இந்தியா—சிங்கப்பூர் இடையே டெலிபோன் சர்வீஸ் ஜூன் 16-ந் தேதி ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★

நீதி நிர்வாகம்
தஞ்சை மாவட்டத்தில் நீதி நிர்வாகப் பிரிவினை காரணமாக 15 நபர்கள் நீதிப் பிரிவு சப்—மாஜிஸ்திரேட்டுகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஜூலை முதல் பதவி ஏற்பார்கள் என்று தெரிகிறது.

★

போராட்டம்
ஏனும் இணைப்புப் போராட்டம் கன்னடர்களால் நடந்து வருகிறது என்று கர்னூலுக்கு செய்தி கிடைத்திருக்கிறது.

கலா நிகழ்ச்சி

13—6—54 மாலை 6 மணிக்கு ... அவுசி திடலில், நாமக்கல் தி. மு. கழகச் சார்பில் தோழர் சிறுமணி-சுப்பிரமணியம் அவர்களும், அவர்தம் குழுவினராலும் திராவிட நாடு பிரிவினை பற்றி ஓர் கலா நிகழ்ச்சி நடைபெறும்.

'நம் நாடு' வெளியூர் ஏஜண்டுகட்கு

'நம் நாடு' வெளியூர் ஏஜண்டு தோழர்கட்கு, மே மாதத்திய பட்டியல் (பில்) அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இன்றுவரை பட்டியல் பாக்கியை அனுப்பாமலிருக்கும் ஏஜண்டுத் தோழர்கட்கும், டெபாசிட்டுக்குமேல் அதிகப் பாக்கியுள்ள தோழர்கட்கும் 'நம் நாடு' இதழ் அனுப்புவதை அறிவிப்பின்றி நிறுத்தப்படும். பழைய பாக்கியுள்ள தோழர்களுடைய ஏஜண்டு ரத்து செய்து, பல கடிதங்கள் எழுதியும், நாணயக் குறைவாகவும், மௌனமாயும் இருந்து வருகிறார்கள். 20—6—54-க்குள் பாக்கி ரூபாய் அனுப்பி வைக்கப்படாவிட்டால், இவர்களுடைய பெயர் வரிசை 'நம் நாடு' இதழில் வெளியிடப்படும்.

ஏஜண்டு இல்லாத ஊர்கட்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை; விபரங்கட்கு எழுதவும் :—

இராயபுரம், சென்னை-13
11—6—54

"நம் நாடு,"
பொறுப்பாளர்.

மதுரை மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாடு வரவேற்புக் குழு அவசரக் கூட்டம்

"மதுரை மாவட்ட 2-வது மாநாட்டு நடைமுறை வேலைகளை தொடர்ந்து நடத்த மேற்கொண்டு கமிட்டியை புதுப்பித்து உடனடியாக மாநாட்டை நடத்த வேண்டி யிருப்பதால் மாநாட்டு கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் 13—6—54 ஞாயிறு மாலை 3 மணிக்கு, மதுரை நகர் தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்திற்கு இதையே அழைப்பாக கருதி தவறாது வருகை தர வேண்டுகிறேன்" என மாநாட்டுச் செயலாளர் என். முத்து வேண்டிக்கொள்ளுகிறார்.

திருமணம்

மணமகன் : க. ந இராமச்சந்திரன்
மணமகள் : வே. மங்கையர்க்கரசி (உடையார்பாளையம் மறைந்த ஆசிரியர் வேலாயுதம் அவர்களின் மூதற் செல்வி)

13—6—54 ஞாயிறு காலை 10-30 மணி அளவில், தோழர் கே. ஆர். விசுவநாதம் எம். எல். ஏ அவர்கள் தலைமையில காடுகுளம் (ஜெயங்கொண்டம்) மணமகன் இல்லத்தில் நடைபெறும். பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் டி. பி. வேதாசலம், மு. கருணாநிதி, வி. பூவராகசாமி, எம் பி. ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசுவர்.

• • •

13—6—54 காலை 8 மணிக்கு தோழர் எம். ராசகோபாலனுக்கும்—தோழியர் சிவகாமிக்கும் காஞ்சிபுரத்திற்கடுத்த தாமல் கிராமத்தில் திருமணம் நடைபெறும். அதுபோது தோழர்கள் மா. நன்னன், முகவை ஆர். எஸ். பாண்டியன், வைகை பி. அண்ணாமலை ஆகியோர் பேசுவர்.

• • •

13—6—54 காலை 8 மணிக்கு தோழர் வி. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில தோழர் ப. வரதராசனுக்கும்—தோழியர் அ. பாலாம்பாளுக்கும் சென்னை திருவொற்றியூர் சன்னதி வீதி எண் 12, மங்காட்டு எல்லப்ப செட்டியார் சத்திரத்தில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். தோழர்கள் கே. இறையுடிமணி, இ. ந. மதியாணன், என். எம். சடையப்பன் ஆகியோர் பேசுவர்.

கர்நாடக மாகாண தமிழர் உரிமைபாதுகாப்பு சங்கம்

13—6—54 மாலை 4 மணிக்கு பெங்களூர், ஜெயப்பிரகாஷ் மைதானத்தில், மேற்படி சங்கத்தின் முதலாண்டு விழா தோழியர் கே. ராஜேஸ்வரி தலைமையில் நடைபெறும்.

கழகக்கூட்டங்கள்

★

காட்டுமன்னார்குடி
சிவன் கோயிலுக்கு எதிரில்
12-6-54 சனி மாலை 5 மணிக்கு
தலைவர் :
ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.
பேசுவோர் :
சி. என். அண்ணாதுரை
அ பொன்னம்பலனார்
இரா பாலகுருசாமி
பொ. சொக்கலிங்கம்

★

உறையூர்
அப்பையன் பிள்ளையார் கோவில் மைதானம்
13—6—54 ஞாயிறு மாலை
பேசுவோர் :
ஈ. வே. கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

அறந்தாங்கி
வ. உ. சி. திடலில்
13—6—54 மாலை 6 மணிக்கு
தலைவர் : எஸ். நெடுமாறன்
பேசுபவர் :
சி. பி. சிற்றரசு

★

சின்னசமுத்திரம்
13—6—54 ஞாயிறு மாலை
தலைவர் த. பூங்காவனம்
பேசுவோர் :
மணிஎழிலன்
த இளங்கோவன்

★

வேலூர் (வ. ஆ.)
13—6—54 மாலை 6½ மணிக்கு
பேசுபவர் :
முகவை ஆர். எஸ். பாண்டியன்

இளைஞர் தமிழ் மன்ற மூன்றாவது ஆண்டுவிழா

13-6-54 ஞாயிற்றுக்கிழமை [illegible] குறிச்சி வடக்குத் தெருவில் காலை 9 மணி முதல் 1 மணி வரையில் நடைபெறும் நிகழ்ச்சியில், தலைவர் டி. எல். ஆர். [illegible] அவர்கள் இரா. நெடுஞ்செழியன் படத் திறப்புவிழா [illegible]. தோழர் கே. ஆர். ராமசாமி தி. மு. கழகக் கொடியேற்றி வைப்பார். தோழர்கள் ஜி. மனோகரன், இளமுருகு, தோழியர் பொற்செல்வி ஆகியோர் பேசுவர்.

மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரையில் பொதுக்கூட்டம் நடைபெறும். 'நிகழ்கால அரசியல்' குறித்து, தோழர்கள் ஜி. மனோகரன், கே. ஆர். ராமசாமி, இளமுருகு, தோழியர் பொற்செல்வி ஆகியோர் பேசுவர்.

[illegible] இருகத் [illegible] தோழர் இரா. நெடுஞ் [illegible] அவர்க [illegible] அச்சகத்தில் [illegible] (24, [illegible] இதழ், [illegible]) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.